


★ சினிமா டைரக்டர் வெற்றிமாறன் ★ வர்கீஸ் குரியன் ★ ஐசக் ★ சுல்தான் ரபி

# லயோலா கல்லூரி மாணவர் சங்கம் சார்பில் சாதனை மாணவர்களுக்கு விருதுகள்

சென்னை செப் 27

**லயோலா கல்லூரி பழைய மாணவர்கள் சங்கம் சார்பில் சாதனை படைத்தவர்களுக்கு தங்கள் துறையில் படைத்த சாதனைக்கு விருதுகள் வழங்கப்பட்டது.**

திரைப்பட டைரக்டர் வெற்றிமாறன், பால் உற்பத்தியில் புரட்சி படைத்த வர்கீஸ் குரியன், ஐசக், சுல்தான் ரபி ஆகியோருக்கு விருதுகளை பழைய மாணவர் சங்கத் தலைவர் விஐடி பல்கலைக்கழக வேந்தர் ஜி. விஸ்வநாதன் மற்றும் கல்லூரி முதல்வர் ஏ. தாமஸ் ஆகியோர் வழங்கினர்.

பழைய மாணவர் சங்க செயல்பாட்டுக்காக கோபால் ரத்தினத்திற்கு சான்றிதழ் விருது வழங்கப்பட்டது. இந்த விழாவில் விஐடி பல்கலைக்கழக வேந்தர் கலந்து கொண்டு வாழ்த்திப் பேசினார்.

லயோலா பழைய மாணவர் சங்க தலைவர் விஐடி பல்கலைக்கழக வேந்தர் ஜி. விஸ்வநாதன் மற்றும் இந்த பழைய மாணவர் சங்க டைரக்டர் மற்றும் கல்லூரி முதல்வர் ஏ. தாமஸ், லயோலா கல்லூரியின் ரெக்டர் பிரான்சிஸ் பி. சேவியர் மற்றும் துணை முதல்வர் ஜே. ஏ. சார்லஸ், இந்த சங்கத்தின் செயலாளர் பாலமுருகன் ஆகியோர் விழாவில் கலந்து கொண்டனர்.